**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 6** |
| **Name** | : | திரு. வெங்கடேஷ்பாபு |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **03.03.2022**

**முதல் விசாரணை :**

நான் நேருநகர், பைபாஸ் ரோட்டில் குடியிருந்து வருகிறேன். கடந்த 31.07.2015ம் தேதி இரவு நான் எனது வேலையை முடித்து விட்டு எனது வீட்டிற்கு வந்தேன். வீட்டிற்கு உள்ளே சென்றுவிட்டேன். எனது வீட்டிற்கு முன்பு ஒரே கூட்டமாக இருந்தது. உள்ளே சென்று எனது மனைவியிடம் கேட்டேன். எனது மனைவி என்னிடம் கொலை நடந்திருப்பதாக பொதுவாக சொன்னார். நான் வசிக்கும் வீட்டிற்கு மேல் வீட்டில் குடியிருக்கும் பெண் இறந்ததாக சொன்னார். இறந்தவர் பெயர் எனக்குத் தெரியாது. அந்த வீட்டு உரிமையாளர் சேகர் அங்கே நின்று கொண்டிருந்தார். நான் அவரிடம் விசாரித்தேன். அப்போது தனது வீட்டு மாடியில் கொலை நடந்துவிட்டதாக சொன்னார். போலிசார் அங்கு இருந்தார்கள். சேகர் என்பவரை போலிசார் கூப்பிட்டார்கள். சேகர் என்னையும் வாருங்கள் என்று அழைத்தார். சம்பவம் நடந்த இடத்திற்கு கூட்டிச் சென்றார்கள். அங்கு போன பிறகு என்னை உள்ளே விடவில்லை. என்னை வெளியிலேயே நிற்க சொன்னார்கள். அப்போது இரவு சுமார் 08.45, 09.00 மணி இருக்கும். சேகரை மட்டும் உள்ளே வரச் சொன்னார்கள். போலிசார் அந்த வீட்டிற்கு உள்ளே அவர்களுக்குத்

தேவைப்படும் துணிகளை எடுத்தார்கள். டைல்ஸ் பிட் உடைத்து எடுத்தார்கள். இந்த இரண்டைத்தான் நான் பார்த்தேன். எனக்கு ஒருமாதிரி இருந்ததால் நான் வந்துவிட்டேன். கீழே வந்த பிறகு போலிசார் ஒரு சீட்டில் கையொப்பம் போடச்சொன்னார்கள். நான் கையொப்பம் செய்தேன். ஒரு கையொப்பம் தான் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வதுகையொப்பம் என்னுடையது தான். அதே போல் என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். முதலில் என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள கையொப்பம் சம்பவ இடத்தை பார்த்ததற்காக வாங்கினார்கள். அந்த பார்வை மகஜர் **அதசாஆ.3 ஆகும்.** இரண்டாவது நான் சாட்சி சொல்வதற்காக என்ன பார்த்தேனோ அதை சொல்வதற்காக கையொப்பம் வாங்கினார்கள். அந்த அத்தாட்சியில் உள்ள கையொப்பம் மட்டும் **அதசாஆ.4 ஆகும்.** நான் கையொப்பம் செய்த தாளில் எழுதி இருந்தது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் என்னென்ன என் முன் எடுத்தார்கள் என்று எழுதப்பட்டிருந்தது. அந்த அத்தாட்சி **அதசாஆ.5 ஆகும்.** போலிசார் என் முன்பாக கேரிபேக்கில் துணி எடுத்தார்கள். டைல்ஸ் உடைத்து எடுத்தார்கள். அதாவது மார்பிள் கல் எடுத்தார்கள். ரத்தம் படியாத மார்பிள் கல், ரத்தம் படிந்த மார்பிள் கல், சோபா துண்டு ரத்தம் படிந்தது, இரத்தம் படியாதது , மெத்தை விரிப்பு ஆகியவற்றை எடுத்தார்கள். அவைகள் முறையே **அசாபொ.8 முதல் 12 ஆகும்.** என்னிடம் காட்டப்படும் தலையணை, கைலி, மிளகாய் பொடி ஆகியவை என் முன்பாக எடுக்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

நான் முதல் விசாரணையில் சொன்னது போல், நான் வேலைக்கு சென்றவிட்டு வந்து, எனது மனைவியிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டதை பற்றி போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். சேகர் அழைத்தன் பேரில் சென்றேன் என்ற விபரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சேகர் என்னை அழைக்கவீல்லை அவர்

சோகமாக நின்றதை பார்த்து நான் சென்று விசாரித்தேன். இறந்தவர் வீட்டிற்குள் நான் மட்டும் தான் சென்றேன் என்றால் சேகர் தான் உள்ளே சென்றார், போலிசார் என்னை உள்ளே விடவில்லை. நான் வெளியே நின்றேன். எனவே உள்ளே என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. எடுத்த பொருட்கள் என் முன்பாக எடுத்தார்கள். நான் ஒரு ஹோட்டலில் மேலாளராக வேலை செய்கிறேன். பொதுவாக காலை 07.30 மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டு, மாலை சுமார் 08.30 முதல் 09.15 க்குள் வந்துவிடுவேன். நான் மேலாளராக இருப்பதால் ஓட்டலின் அன்றாட வேலைகளை முடித்துவிட்டுதான் வீட்டிற்கு வருவேன். நான் வேலை செய்யும் ஓட்டல் boarding and Lodging என்றால் lodging மட்டும் தான். என்னுடைய வேலை நேரம் 12 மணி நேரம் ஆகும். 12 மணி நேரம் கழித்து கணக்கு முடித்து வருவேனா அல்லது 12 மணி நேரத்திற்குள் கணக்கு முடித்துவிடுவேனா என்றால் ஒரு 1/2 மணி முன்னபப்பின்ன ஆகும். சில நேரம் காலதாமதமாக வருவேன். சில நேரங்களில் இரவு 11, 12 மணி வரை ஆகும். நான் குடியிருக்கும் பகுதியில் எத்தனை வருடங்கள் வசித்தேன் என்றால் 4 வருடங்கள் வசித்தேன். தற்போது நான் அங்கு வசிக்கவில்லை. நான் வசித்து வந்த பகுதிக்கு தெரு முக்கு கார்னரில் குடியிருப்போர் சங்கம் போர்டு உள்ளது என்றால் சரிதான். குடியிருப்போர் சங்கம் மூலம் நேருநகர், மறைமலர் நகர் ஆகிய பகுதிகளில் CCTV கேமிரா உள்ளது என்றால் சரிதான். சாட்சி மீண்டும் சம்பவ சமயத்தில் கேமிரா இல்லை என்று சாட்சியம் அளிக்கிறார். நானும் சேகரும் எவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருந்தோம் என்றால் 2,3 நிமிடங்கள் பேசினோம். நாங்கள் பேசிக்கொண்டிருந்த போது போலிசார் வந்தார்களா என்றால் போலிசார் அங்கே தான் இருந்தார்கள். என்னை விசாரணை செய்த அதிகாரி யார் என்று எனக்குத் தெரியாது. அதிகாரி என்ன ரேங்க் என்று தெரியாது. அந்த சமயத்தில் மோப்ப நாய்கள், கை ரேகை நிபுணர்கள் இருந்தார்களா என்றால் நான் பார்க்கவில்லை. நான் கையொப்பம் செய்த பார்வை மகஜர், வரைபடம், ஆகியவற்றை யார் தயார் செய்தார்கள் என்று தெரியாது. என் முன்பு போலிசார் இரண்டு ஜாமான்கள்

எடுத்தார்கள் என்றால் சரியல்ல, நான் 2 பொருட்கள் எடுக்கும்போது பார்த்தேன். டைல்ஸ் மற்றும் சோபா துணி எடுக்கும்போது பார்த்தேன். சம்பவ சமயத்தில் நான் வேலை முடித்து வர இரவு 12.00 மணிக்கு மேல்தான் வந்தேன் என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அதற்கு அவசியம் இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | **:** | **PW : 7** |
| **Name** | **:** | திரு. சேகர் |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **03.03.2022**

**முதல் விசாரணை :**

நான் நேருநகரில் குடியிருந்து வருகிறேன். நான் காம்பவுண்டு வீடு வைத்துள்ளேன். 2015ம் ஆண்டு 7வது மாதம் 31ம் தேதி நான் மதியம் 02.00 மணிக்கு சாப்பிட வந்தேன். சாப்பிட்ட பிறகு நான் தூங்கும் பழக்கம் உள்ளது. நான் சோபாவில் வீட்டில் தூங்கிக்கொண்டு இருந்தேன். அப்போது, எனது வீட்டின் எதிர் வீட்டில் உள்ளவர்கள் வாங்க, வாங்க என்று என்னை நோக்கி கத்தினார். ஏதோ பிரச்சனை என்று சொன்னார். நான் வெளியே வந்து பார்த்தபோது, எதிர் வீட்டுக்கார் என்னிடம் உங்கள் வீட்டில் ஏதோ பிரச்சனை என்று சொல்லவும் நான் சென்று பார்த்தேன். அப்போது மதியம் சுமார் 03.00, 03.30 மணி இருக்கும். அப்போது நான் ஓடிச்சென்று பார்த்தேன். அப்போது கௌரி என்பவர் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். அவரது வீட்டுக்கார் அவரை தூக்கி பிடித்துக்கொண்டு இருந்தார். போலிசுக்கும், ஆம்புலன்சுக்கும் போன் செய்தார்கள். அப்போது யாரோ சொல்லி ஆட்டோ வந்து ஆட்டோவில் அவரை கொண்டு சென்றார்கள். ஆட்டோவில் சென்ற பிறகு நிறைய போலிசார் வந்து விசாரித்தார்கள். போலிசார் சுமார் 04.30 மணிக்குள் வந்துவிட்டார்கள். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் வீட்டிற்கு

வந்திருக்கிறார். 2,3 முறை வந்திருக்கிறார். வீட்டு உரிமையாளர் என்ற முறையில் நான் அவரை நிறுத்தி விசாரித்துள்ளேன். நான் கேட்டபோது, வெங்கடேஷ் என்பவரின் தம்பி என்று சொன்னதால் சரி போகட்டும் என்று நான் அனுப்பினேன். சம்பவத்தன்று நான் வீட்டு வாசலில் நின்றுகொண்டு இருந்தேன். நானும் வெங்கடேஷ்பாபுவும் பேசிக்கொண்டு இருந்தோம். அங்கு ஏற்கனவே 2,3 போலிசார் நின்றுகொண்டு இருந்தார்கள். அப்போது, SI யும், inspector யும் வந்தார்கள். வந்ததும் மாடிக்கு கூப்பிட்டார்கள். நான் அப்போது வெங்கடேஷ்பாபுவை துணைக்கு கூட்டிச் சென்றேன். அவரை வாசலில் நிற்க வைத்தார்கள். நான் உள்ளே சென்றேன். ஒரு இரத்தம் படிந்த கல், ,இரத்தம் படியாத கல், சோபாவில் இருந்த துணி, நைட்டி துணி, ஆகியவை எடுத்தார்கள். அதற்கான அத்தாட்சியில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அது போக மற்றொரு கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அசாஆ.5 அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் இரத்தம் படிந்த, இரத்தம் படியாத டைல்ஸ் கற்கள், சோபாதுணி, தலையணை, கைலி, நைட்டி துணி ஆகியவற்றை என்முன்பாக கைப்பற்றினார்கள். கைலி **அசாபொ.13, தலையணை அசாபொ.14 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

நான் முதல் விசாரணையில் சொன்னது போல், நான் மதியம் 02.00 மணிக்கு தூங்கிக்கொண்டு இருந்தேன். அப்போது சத்தம் கேட்டது, நான் ஓடிப்போய் பார்த்தேன் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். அன்றை தினம் மதியம் 02.00 மணி முதல் இரவு வரை அங்கு தான் இருந்தேன். அக்கம் பக்கம் இருந்தவர்கள் போலிசுக்கும், ஆம்புலன்சுக்கும் போன் செய்தாரகள் என்ற விபரத்தையும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். அதே போல் இறந்த நபரை ஆட்டோவில் ஏற்றிச் சென்ற விபரத்தையும் சொல்லியுள்ளேன். நான் முதலில் ஒரு ஆட்டோ டிரைவராக இருந்தேன். இறந்த நபரை ஏற்றிச்சென்ற ஆட்டோ எனக்கு தெரிந்த ஆட்டோ என்றால் சரியல்ல. போலிசாருக்கு போன் செய்த 1/2 மணி

நேரத்தில் வந்துவிட்டார்கள். போலிசாருக்கு யார் போன் செய்தார்கள் என்று எனக்குத் தெரியாது. போலிசார் வந்த போது சுமார் 10,20 நபர்கள் இருந்தார்கள். சம்பவம் நடந்த உடனே நான் சென்று பார்த்தபோது காம்பவுண்டில் இருந்த சுமார் 5,6 நபர்கள் இருந்தார்கள். காம்பவுண்டு வீட்டிற்கு உரிமையாளர் நான் தான். எனது காம்பவுண்டு ஒரு பாதுகாப்பான காம்பவுண்டு ஆகும். நான் அந்த பகுதியில் சுமார் 20 வருடமாக குடியிருக்கிறேன் என்றால் சுமார் 17,18 வருடங்களாக இருக்கிறேன். சம்பவம் நடந்த வீட்டில் யார் யார் இருந்தார்கள் என்றால் இறந்த பெண், அவரது கணவர், பக்கத்து வீட்டு சங்கீதா மற்றும் சில பெண்கள் இருந்தார்கள். அக்கம் பக்கம் இருந்த பெண்களில் சங்கீதா மட்டும் எங்கள் காம்பவுண்டு வீட்டில் குடியிருந்தார்கள். மற்றவர்கள் அக்கம் பக்கத்தில் குடியிருப்பவர்கள். அவர்கள் யார் என்று பார்க்கவில்லை. எனது காம்பவுண்டு வீட்டில் 6 வீடுகள் உள்ளது. ஒரு வீட்டை தவிர மற்ற 5 வீடுகளில் ஆட்கள் குடியிருந்தார்கள். எனது காம்பவுண்டு வீடு RC Roof போட்ட ஒரு சென்டிரிங் வீடு ஆகும். எனது காம்பவுண்டு வீட்டின் கேட் எப்போது பூட்டுவீர்கள் என்றால் கேட் எப்போதும் சும்மாதான் பூட்டி இருக்கும், அவர் அவர்கள் வீட்டைத்தான் பூட்டிக் கொள்வார்கள். காலி வீடு தவிர மற்ற வீடுகளில் சம்பவ சமயத்தில் ஆட்கள் இருந்தார்கள் என்றால் இருந்தார்கள். வேலைக்கு போவார்கள். நான் கையொப்பம் செய்ததாகவும், போலிசார் பொருட்கள் கைப்பற்றியதாகவும் போலிசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியைத் தெரியும் என்று போலிசார் சொல்லி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் எதிரி வந்து போன விபரத்தை சொன்னேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை